**தலைப்பு 101 – புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஒக்தோபர் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையொன்றை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) இந்த அறிக்கையில் 3.8(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

**(அ) நிதியேற்பாட்டினை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் 2 மூலதனச் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,500,000 மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டதுடன் 7 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 5 மூலதனச் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 115,970,000 மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 46,913,050 கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் 16 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தன. | 2 மூலதனச் செலவின விடயங்களின் முழுமையான சேமிப்பு<br>திரையரங்கம் மற்றும் அலுவலகக் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக கோரிய நிதியேற்பாடுகள் போதுமானதாக இல்லாததால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதேபோல், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் ஸ்ரீ தலதா மாளிகையின் நிர்மாண வேலைகளிற்காக நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான செலவினங்கள் அந்த அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் சுங்க வரிகள் செலவின விடயக் குறியீடு 10-2205(14) இன் கீழ் செலுத்தப்படுகின்றதால் நிதியேற்பாடு | உண்மையான அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

முழுவதும் சேமிக்கப்பட்டது.

16 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான வீச்சிலான சேமிப்புக்கள்.
மதிப்பீடுகளை தயாரிக்கும் சமயத்தில் அந்த நேரத்தில் உள்ள பதவியணி நிலையின் அடிப்படையில் அவை தயாரிக்கப்பட்ட போதிலும் உத்தியோகத்தர்களின் நிலைய இடமாற்றங்களில் மாற்றம், ஓய்வு பெறுதல், இராஜாங்க அமைச்சுக்கு இணைப்பு செய்யப்படுதல், செலவின முகாமைத்துவ சுற்றறிக்கைகளுக்கு இணங்குதல் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் பரவுதல் போன்ற அத்தகைய காரணங்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன.

**(ஆ) நி.பி. 66 வகைமாற்றங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளின் சேமிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து நி.பி. 66 வகைமாற்றங்களின் கீழ் மீண்டெழும் செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 700,000 மொத்த நிதியேற்பாடும், மூலதனச் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,820,000 நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன. | மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகளுக்காக மதிப்பிடப்பட்ட தொகை பெறப்படாததால் திசெம்பர் மாதத்திற்கான மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு நிதிகள் மாற்றப்பட்ட போதிலும் கொவிட்-19 தொற்றுநோயால் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ஏற்பட்டிருக்காததன் காரணமாக நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன.<br><br>நி.பி. 66 வகைமாற்றங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 826.000 நிதியேற்பாட்டில், ரூபா 421,500 தொகை மாத்திரம் சேமிக்கப்பட்டதுடன் பொறுப்புகளுக்காக ரூபா 158,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ரூபா 262,250 கடப்பாட்டு மீதி பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக இருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நிதியேற்பாடுகளின் வகைமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் அமைச்சினால் டவர்ஹோல் அரங்க மன்றத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 20,735 தொகை மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், அது பொறுப்புக்களாக அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய தகவல்கள் அல்லது விலைப்பட்டியல்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருக்காததுடன் அது பொறுப்பு பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக டவர்ஹோல் அரங்க மன்றத்திடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |

**2.3 பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை முறையாக அமுல்ப்படுத்துவதில் ஆக்கபூர்வமான முறைமை காணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளின் பிரகாரம் அத்தகைய தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சாகச் செயற்படுகின்றதால், புத்தசாசனப் பிரிவில் நிறுவப்பட்ட உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பிரதம உள்ளக கணக்காய்வாளரின் கீழ் கலாசார அலுவல்கள் பிரிவின் உள்ளக செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 மற்றும் 40 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் கீழ் உள்ள ஒப்பந்தங்களின் மொத்த நிறுத்திவைத்தல் பண மீதி ரூபா 99,596,333 தொகையானதுடன் அதில் புத்தசாசனப் பிரிவு தொடர்பான ரூபா 57,343,077 தொகையான நிறுத்தி வைத்தல் பண மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. 2 | ரூபா 605,379.75 தொகையான வைப்புக்களிற்காக எந்தவொரு உரிமைகோரல்களும் மேற்கொள்ளப்படாததால் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ரூபா 22,058,338 கூட்டுமொத்தமான வைப்புக்கள் வித்யாலங்கார சர்வதேச பௌத்த நிலையத்தின் | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கு மேலாக காலம் கடந்திருந்த ரூபா 21,711,494 கூட்டுமொத்தமான எட்டு வைப்பு மீதிகள் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் தொடர்புடைய கணக்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணத்துடன் தொடர்புபட்டிருந்தது. வெளிப்புறப் பகுதியின் மேற்பார்வையின் கீழ் செயற்திட்டத்தைக் கையேற்கும் பொருட்டு தொழில்நுட்ப அறிவு தேவைப்படுகின்றது. 2020 திசெம்பரில் பொறியியலாளர் ஒருவர் அமைச்சிற்கு வந்ததும் செயற்திட்டத்தை கையேற்க முடியும். | |

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.5 மற்றும் 4.6 ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>கலாசாரப் பிரிவில் 2 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 127,522 கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்ததுடன் இறந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 101,300 கடன் மீதி மற்றும் புத்தசாசன பிரிவில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 167,055 கடன் மீதி என்பன 2 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்பட்டது. | ரூபா 128,732.40 தொகையான கொடுப்பனவு இணங்கப்பட்டிருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 35,810 இடர்கடன் மீதியை காசோலை மூலம் அமைச்சுக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும், அது இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தாபனவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல். | தாபனவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | பணி இடைநிறுத்தப்பட்ட கலாசாரப் பிரிவின் 8 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 623,090 கடன் மீதி மற்றும் பணி இடைநிறுத்தப்பட்டு 4 வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட புத்தசாசனப் பிரிவின் உத்தியோகத்தர் | அத்தகைய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபனவிதிக் கோவை மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஒருவரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 32,155 கடன் மீதி என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் விதிக் கோவையின் 4.2.3 ஆம் உபபிரிவு மற்றும் அரச நிதி பணிப்பாளரால் வழங்கப்பட்ட 2015 ஒக்தோபர் 09 ஆம் திகதிய பிஈடி/ஆர்ஈடி/2015/08 பொது (i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.3(உ) பந்தி ஆகியவற்றின் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு பெறுமதிகள் மீளாய்வாண்டு தொடர்பாக கலாச்சாரப் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக செயலாற்றல் அறிக்கை மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றில் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தின் சதவீதமாக வழங்கப்பட்ட பௌதீக செயலாற்றலை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2020 ஆம் ஆண்டுக்கான நிதியேற்பாடுகள் வருடாந்த பாதீட்டின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் 4 வாக்குப்பண கணக்குகள் மூலம் 4 சந்தர்ப்பங்களில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடுகளை குறிப்பாக இனங்காண முடியாதிருந்ததுடன் இதனால் எதிர்பார்க்கப்படும் வெளியீட்டு பெறுமதிகளைக் குறிப்பிடுவது சிக்கலாக காணப்படும். ஆகையால் வெளியீட்டு பெறுமதிகள் 2020 ஆம் ஆண்டிற்கான செயலநடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், அமைச்சு, நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் | ஒவ்வொரு செயற்திட்டம் தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு பெறுமதிகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

அனைத்துப் பிரிவுகளினதும் செயன்முன்னேற்றம் என்னால் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்ததன் பின்னர், தொடர்புடைய பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றி, எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு தொடர்பாக கலாச்சாரப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பொதுச் சேவைகள் ஆக்கத்திறன் போட்டி தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் யாழ்ப்பாண கலாசார நிலைய செயற்திட்டத்தின் நிர்மாணம் என்பவற்றிற்கான முறையே ரூபா 3,500,000 மற்றும் ரூபா 28,000,000 தொகைகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டங்கள் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br>ஆண்டு. பொது சேவைகள் போட்டி தொடர்பான நடவடிக்கைகளின் நிதி செயன்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் 37 சதவீதமாக குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண கலாச்சார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 28,000,000 நிதியேற்பாட்டில், ரூபா 27,960,000 தொகை கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருள் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கு | பொதுச் சேவைகள் ஆக்கத்திறன் போட்டியின் ஆரம்பப் பணிகள் மற்றும் அது தொடர்பான செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - 2020 தொடங்கப்பட்டிருந்த போதிலும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக அவற்றை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.<br><br>2020 நவம்பர் 30 இல் உள்ளவாறு (இந்தியன் உதவிகள்) செலவின விடயக் குறியீடு 101-2-5-36-2509 இன் கீழ் யாழ்ப்பாண கலாச்சார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பின்வரும் நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.<br><br>• கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருள் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - ரூபா 16,999,936.96<br>• மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் - ரூபா 3,000,000<br>• கால்நடை மற்றும் கிராமிய சமூதாய அபிவிருத்தி அமைச்சு - ரூபா 7,960,357.64 | திட்டமிட்டவாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தொடர்புடைய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்ததுடன், இதனால் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 100 சதவீதம் மற்றும் 0 சதவீதமாக காணப்பட்டது. | யாழ்ப்பாண கலாச்சார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்திய மானியத்தின் கீழ் வாக்குப்பண கணக்கு மூலம் ரூபா 20 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் இப் பணம் கலாச்சார நிலையத்தின் மின்சார விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்காக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருள் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 59,430,000 பெறுமதியான 8 மூலதன செயற்திட்டங்களும், ரூபா 19,120,000 பெறுமதியான 6 மீண்டெழும் செயற்திட்டங்களும் காணப்பட்டன, இவற்றின் மூலம் கலாசாரப் பிரிவு தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் எதுவும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டங்களில் முறையே ரூபா 31,540,961 மற்றும் ரூபா 13,477,897 தொகைகள் செலவிடப்பட்டிருக்காததுடன் அவற்றின் பௌதீக செயன்முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | 01/2020 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கப் பணத்தைச் சேமிப்பதன் மூலம் செலவினங்களை முகாமைசெய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் மற்றும் செலவினங்களின் ஆகக்கூடிய செயற்திறனை அடைந்துகொள்ளுதல் ஆகிய நோக்கங்களுடன் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய செயற்திட்டங்களிற்குரிய எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டங்கள் அடைந்துகொள்ளப்பட வேண்டும். |

**3.4 எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் ற்றுக்கொள்ளப்படாமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 145.7 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2016 செப்தெம்பர் 16 இல் ஆரம்பிக்கப்பட்டு 2020 | செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் ஒரு குறிப்பிட்ட திகதி மற்றும் எதிர்பார்க்கப்படும் வேலைத் திட்டத்தை சுட்டிக்காட்டி | திட்டமிட்டவாறு செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செப்தெம்பர் 30 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த புத்தசாசன பிரிவினால் அமுல்ப்படுத்தப்பட்ட ஸ்ரீ தலதா மாளிகையுடன் இணைக்கப்பட்டுள்ள பல்லேகல செயற்பாட்டுப் பயிற்சி நிறுவகத்தின் நிர்மாணப் பணிகள் கணக்காய்வு திகதியான 2021 ஆகஸ்ட் 11 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பூர்த்திசெய்தல் காலத்தை விஞ்சி ஏறத்தாழ ஒரு வருடம் கடந்திருந்த போதிலும் அதன் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 41 சதவீதம் மற்றும் 56 சதவீதமாக காணப்பட்டன. | திட்டமொன்றை சமர்ப்பிக்குமாறு ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் விஞ்ஞாபன உடன்படிக்கையின் பிரகாரம் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால் ஒப்பந்ததாரருக்கான நேரடித் தலையீடு அமைச்சினால் மேற்கொள்ளப்பட முடியாதிருந்ததுடன் செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களில் இவ் விடயம் கலந்துரையாடப்பட்டிருந்தது.<br><br>கொவிட் தொற்றுநோயால் செயற்திட்ட பணிகள் மேலும் தாமதமான போதிலும் 2021 ஆகஸ்ட் 17 இல் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் 77 சதவீத நிலையை அடைந்திருந்தது. | |
| (ஆ) | கலாச்சாரப் பிரிவினால் அமுல்ப்படுத்தப்பட்ட உள்ளார்ந்த அறிவு (interior knowledge) மற்றும் கலாச்சார விழுமியங்கள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான செயற்திட்டத்தின் மூலம் புத்தளம் மாவட்டத்தில் நாட்டுப்புறக் கலை தொடர்பான ஆராய்ச்சி புத்தகமொன்றை அச்சிடுவதற்கு திட்டமிடப்பட்டு, அத்தகைய 1000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தன. எனினும், 2021 மே 31 வரை புத்தகத்தின் 17 பிரதிகள் மாத்திரமே அமைச்சின் பல்வேறு பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டன, மீதமுள்ளவை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன. | கொவிட் தொற்றுநோய் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் புராணம் தொடர்பான ஆராய்ச்சி புத்தகத்தை பிரபலப்படுத்த முடியாதிருந்ததுடன் இது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | தொடர்புடைய செயற்திட்டங்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 21,383,325 கிரயத்தில் மதிப்பிடப்பட்ட உகன கலாச்சார நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக 2015 முதல் 2018 வரை மாவட்டச் செயலாளருக்கு ரூபா 21,850,000 நிதியேற்பாடுகள் காலத்திற்கு காலம் விடுவிக்கப்பட்டிருந்தன. நிர்மாணப் பணிகளின் செயன்முன்னேற்றத்தை அமைச்சு பின்தொடர்ந்திருக்கவில்லை. அத்துடன் கட்டிட நிர்மாணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிர்மாண வேலையின் மூல மதிப்பீடு ரூபா 21,383,352 தொகையாக காணப்பட்டது. மூல மதிப்பீட்டில் சில பிழைகள் காணப்பட்டதன் காரணமாக 2015 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டச் செயலாளரால் ரூபா 23,949,354 தொகைக்கு திருத்தியமைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015.10.13 இல் மாவட்டச் செயலாளருக்கு ரூபா 5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பாக புத்தளம் மாவட்ட செயலாளரினால் அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்ட பின்னர் அமைச்சினால் காலத்திற்கு காலம் நிதியேற்பாடுகள் அனுப்பப்பட்டிருந்தன. நிதி அமைச்சின் மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கை மற்றும் அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் உஹன பிரதேச செயலகத்தின் கள அவதானிப்புக்கள் மூலம் இதன் செயன்முன்னேற்றம் மேற்பார்வை செய்யப்பட்டது. செயற்திட்டங்களின் நிர்மாண செயன்முன்னேற்றம் தற்போது 2 வாரங்களுக்கு ஒருமுறை அமைச்சால் மீளாய்வு செய்யப்படுகிறது. | திட்டமிட்டவாறு உரிய செயற்திட்டங்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புத்தசாசனப் பிரிவு தொடர்பான வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் நிர்மாண வேலைகள் 2019 ஆம் | இச் செயற்திட்டத்தின் v ஆம் கட்டப் பணிகள் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. vi ஆவது கட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுக்கான அமைச்சரவை | தொடர்புபட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திட்டமிட்டவாறு பயன்படுத்தப்பட வேண்டும். |

ஆண்டில் ரூபா 1,204.33 மில்லியன் கிரயம் செலவிடப்பட்டு கட்டம் 5 வரை மாத்திரமே பூர்த்தியடைந்திருந்ததுடன் கட்டம் 6 இன் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

vi ஆம் கட்டத்தின் நிர்மாணத்திற்கான நிதியேற்பாடுகளை கோரி நிதி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அதற்காக கொள்கை ரீதியான தீர்மானம் காணப்பட வேண்டும் என பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சனாதிபதியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் ஊடாக நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதியேற்பாடுகள் கோரப்பட்டன. இந்த நிதியேற்பாடுகள் இலங்கை தரைப்படைக்கு நேரடியாக வழங்கப்படுகிறதா அல்லது இந்த அமைச்சின் ஊடாக வழங்கப்படுகிறதா என்பதை அறிவுறுத்துமாறு கோரி சனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

vi ஆம் கட்டத்தின் நிர்மாணப் பணிகளை தரைப்படையிடம் ஒப்படைப்பதற்கும், நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கும் v ஆம் கட்டத்தின் வேறுபாடுகளிற்காக நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் உரிய இடைக்காலச் செலவினக் கட்டமைப்பின் கீழ் நிதியேற்பாடுகளை மேற்கொள்வதற்கும், பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க v ஆம் கட்டத்தில் உள்ள வேறுபாடுகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும்

அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இடைக்காலத் திட்டத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான vi ஆம் கட்டத்தின் நிர்மாணத்திற்கான நிதியேற்பாடு ரூபா 200 மில்லியனாகவும், 2022 ஆம் ஆண்டுக்கான தொகை ரூபா 52.77 மில்லியனாகவும், 2023 ஆம் ஆண்டிற்கு ரூபா 50 மில்லியனாகவும் அத்துடன் v ஆம் கட்டத்திலுள்ள வேறுபாடுகளுக்காக ரூபா 48.076 மில்லியனாகவும் கோரப்பட்டிருந்தன. v ஆவது கட்டத்தின் வேறுபாடுகளுக்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 48.076 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

vi ஆவது கட்டத்தின் அத்தியாவசிய வேலைகளை இனங்கண்டு, மதிப்பீடு ஒன்றை தயாரித்து சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சு அறிவித்திருந்தது. அதற்கிணங்க மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தால் அத்தியாவசிய வேலைகளின் பாகங்கள் தற்போது இனங்காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

## 3.6 நிதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் முன்னேற்றமடையாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் கலாச்சாரப் பிரிவின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 15 கலாச்சார நிலையங்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டங்கள் தொடர்பான நிதி செயன்முன்னேற்றம், ரூபா 7,930,000 தொகையான அதன் | உரிய மாவட்டச் செயலகங்களால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கலாச்சார நிலையங்களை பழுதுபார்த்து பராமரிப்பதற்காக ரூபா 7,327,000 தொகை விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக சில பெறுகைகள் தாமதமடைந்திருந்தன. | தொடர்புடைய செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் திட்டமிட்டவாறு அடைந்துகொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 96 சதவீதமாக காணப்பட்டதுடன் பௌதீக செயன்முன்னேற்றம் 64 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | அதற்கிணங்க பௌதீக செயன்முன்னேற்றம் 64 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டுள்ள போதிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் தற்போது பௌதீக செயன்முன்னேற்றம் 100 சதவீத நிலையை அடைந்திருந்தது. |

## 3.7 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலாசாரப் பிரிவுக்காக 8 செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்ட போதிலும், 2019 யூலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி தொடர்பாக வழங்கப்பட்ட பிற்சேர்க்கையின் பிரகாரம் அவை வெளியிடப்பட்டிருக்கவில்லை. | 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை தொடர்பான வழிகாட்டல் 12.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் கலாச்சாரப் பிரிவின் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் கலாச்சாரப் பிரிவின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் கீழ் எட்டு செயலாற்றல் குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் நாளதுவரையாக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக இந்த செயலாற்றல் குறிகாட்டிகள் வெளியிடப்பட்டு அவற்றை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகள் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | கலாச்சார பிரிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட 8 குறிகாட்டிகளில் 5 செயலாற்றல் குறிகாட்டிகளின் உண்மையான வெளியீட்டு சதவீத அளவுகள் எதிர்பார்க்கப்பட்ட சதவீத அளவுகளுடன் ஒப்பிடும் போது | 2020 ஆம் ஆண்டு முழுவதும் கொவிட் தொற்றுநோய் காரணமாக, கட்டுப்பாடுகளை விதித்தல் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டங்கள் குறைவதற்கு காரணமாக இருந்தது. | இனங்காணப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகள் தொடர்பாக ஆகக்கூடிய செயன்முன்னேற்றம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 0 தொடக்கம் 32 சதவீதம் வரை குறைந்த அளவில் காணப்பட்டது. 3 செயலாற்றல் குறிகாட்டிகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டங்கள் 25, 31 மற்றும் 26 சதவீதங்களாக காணப்பட்ட அதேநேரம் வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையில் உண்மையான வெளியீடு முறையே 79, 37 மற்றும் 21 ஆக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | | |
| (இ) | கலாச்சாரப் பிரிவிற்கான இணக்க அறிக்கையின் கீழ் இணங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்ட 11 தேவைப்பாடுகள் இணங்கியிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது, | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவைப்பாடுகளுடன் தொடர்புபட்ட இணக்கப்பாடு சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 இன் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பௌத்த மறுமலர்ச்சி நிதியம், Buduputh பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம், புதிய சமய நிலையங்கள், புதிய துறவி நிறுவனங்களின் பதிவுகள், புத்தமத ஆலோசனை சபையின் கூட்டங்கள் மற்றும் ஆலோசனைச் சபையினால் அமுல்ப்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்ட திட்டங்கள் மற்றும் அறிவுரைகள் என்பவற்றின் செயலாற்றல் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களுடன் தொடர்புடைய செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அமைச்சின் முக்கிய தொழிற்பாடுகளின் கீழ் வருகின்ற சர்வதேச ரீதியில் தேரவாத பௌத்தத்தின் பிரச்சார கூட்டத்திற்கான திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் மற்றும் பல்வேறு நலன்கள் மற்றும் வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் நபர்களை ஏனைய மதங்களுக்கு மாற்றுவதைத் தடுப்பதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அவை தொடர்பான செயலாற்றல் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 2,893,409,044 மதிப்பிடப்பட்ட பெறுமதியான கட்டிடங்கள் அமைச்சின் கலாச்சாரப் பிரிவிற்கு சொந்தமான சொத்துக்களாக காட்டப்பட்டிருந்த போதிலும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட காணிகளின் உரிமைத்துவம் அமைச்சால் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கலாச்சார நிலையங்கள் அமைந்துள்ள 70 காணிகளின் உரிமைத்துவம் தற்போது அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய காணிகளின் உரிமைத்துவத்தை கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணிகளின் உரிமைத்துவம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் கலாச்சாரப் பிரிவிற்குச் சொந்தமான 12 மோட்டார் வாகனங்கள் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அவற்றின் உரிமைத்துவம் மாற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய 12 வாகனங்களில் 09 வாகனங்கள் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 02 வாகனங்களை உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த வாகனங்களின் உரிமைத்தவம் மாற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 13.2(ஆ) பந்தியின் பிரகாரம் கைதவிர்க்கப்படக்கூடிய வாகனங்களாக இனங்காணப்பட்டிருந்த கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்த ரூபா 16,300,000 கிரயமான 4 வாகனங்கள் மற்றும் கிரயம் குறிப்பிடப்பட்டிருக்காத 11 வாகனங்களை கைதவிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்ப்பு செய்யப்படக்கூடிய வாகனங்களை அடையாளம் காணும் சபை அத்தகைய வாகனங்களை இனங்கண்டு, மதிப்பீட்டு சபைக்கு பரிந்துரைத்திருந்ததுடன் அத்தகைய செயற்பாடுகள் 2021 ஒக்தோபர் 15 இற்கு முன்னர் தீர்க்கப்படும். | இனங்காணப்பட்ட கைதவிர்ப்பு செய்யப்படக்கூடிய வாகனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிப்பு செய்யப்பட வேண்டும். |

### 3.9 அரசாங்க உத்தியோகத்தர்களால் பிணை வழங்கப்படுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிணை வைப்பை வழங்க வேண்டிய உத்தியோகத்தர்களாக இனங்காணப்பட்ட கலாச்சாரப் பிரிவிலுள்ள 25 உத்தியோகத்தர்களில் 22 உத்தியோகத்தர்களும் புத்தசாசனப் பிரிவிலுள்ள 35 உத்தியோகத்தர்களும் பிணை வைப்புக்களை மேற்கொண்டிருக்கவில்லை. | பிணை வைப்பை வழங்க வேண்டிய அமைச்சின் உத்தியோகத்தர்களின் பரஸ்பர பாதுகாப்பு சங்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்கள் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன. உறுப்புரிமையை பெற்றுக்கொண்ட பின்னர் உடனடியாக எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும். பிணை வைப்பை மேற்கொண்டிருக்காத பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு, தேசிய சேமிப்பு வங்கியில் வங்கிக் கணக்குகளை தொடங்குவதற்கான முதன்மைத் தேவைப்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. | நி.பி. 880 இன் கீழ் பிணை வைப்பை மேற்கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பை வழங்குவதற்கான தேவைப்பாடு நிதிப்பிரமாணங்களை பின்பற்றி நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.10 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்தில் ரூபா 312.49 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள பௌத்த அலுவல்கள், இந்து மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களங்களை அமைச்சின் கீழுள்ள முஸ்லிம் சமய பண்பாட்டு | விளைவற்ற சொத்துக்கள் ஆகக்கூடியளவு பயன்படுத்தப்பட வேண்டும். |

ஏறத்தாழ 33,547 சதுர அடி பரப்பளவு கொண்ட பெரிய இடம் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. இருப்பினும், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன முறையே ரூபா 4,200,000 மற்றும் ரூபா 6,818,000 தொகையான வருடாந்த வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

அலுவல்கள் திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டது.

அது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டு, நிதியேற்பாடுகளுக்கான அங்கீகாரம் பெறப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் மிகுதிப் பணிகளை செய்து முடிப்பதற்கும், உள்ளக பாகப் பிரிவினைகளை மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பணிகள் பூர்த்தியடைந்ததும், மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் அக் கட்டிடத்திற்கு மாற்றப்படும்.

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக கலாச்சாரப் பிரிவிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் உள்ளக கணக்காய்வு திட்டம் புத்தசாசன பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக கலாச்சாரப் பிரிவுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகளை முறையாக அமுல்ப்படுத்துவதற்காக கலாசார அலுவல்கள் பிரிவில் 2018 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக உள்ள உள்ளக கணக்காய்வாளர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த பிரிவில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்காளர் சேவையில் தரம் 1 பதவி இந்த அமைச்சுக்கான பிரதம கணக்காளர் பதவிக்கு மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காளர்கள் சேவையின் தரம் III/II பதவிகள் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட 2 கணக்காளர் பதவிகள் | உள்ளக கணக்காய்வு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தற்போதுள்ள கடமைகளுக்கு போதுமானதாக இல்லாததால் இன்னொரு கணக்காளர் பதவி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்ட பின்னர் உள்ளக கணக்காய்வாளர் பதவி நிரப்பப்படும்.<br><br>இந்த அமைச்சு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சாகச் செயற்படுகின்றது, கலாச்சாரப் பிரிவின் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் புத்தசாசனப் பிரிவில் நிறுவப்பட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளரின் கீழ் செயற்படுகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. அதேபோன்று, புத்தசாசனப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தில் அமைச்சின் கணக்காய்வுத் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலாசாரப் பிரிவிலுள்ள ஆரம்ப நிலை பதவியான கலாச்சார நிலையங்களின் காவலாளிகளின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 201 ஆக காணப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு மேலதிகமாக அவற்றிற்கு தனிப்பட்டதாக மாத்திரம் 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட 107 காவலாளிகளை வைத்திருப்பதற்கு 2020 | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், மாற்றுக் காவலாளிகளாகப் பணியாற்றியிருந்த தகைமையுடைய 114 பேருக்கு நிரந்தரப் பதவிகள் வழங்கப்பட்டு, அவற்றிற்கு தனிப்பட்டதாக மாத்திரமே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனம் பெற்றவர்களில் 107 பேர் மாத்திரமே சேவையில் உள்ளதுடன் அவர்களில் சிலர் 60 வயது பூர்த்தியடைந்த நிலையில் சேவையை விட்டு விலகியுள்ளனர். அதற்கிணங்க தற்போது சேவையில் உள்ள | அங்கீகரிக்கப்பட்டவாறு பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 10 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, உள்ளபடியான பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை 105 ஆல் விஞ்சியிருந்தனர். | கலாச்சார நிலையங்களின் காவலாளிகளின் மொத்த எண்ணிக்கை 308 ஆகும். 194 நிலையங்களின் சில நிலையங்களில் ஒவ்வொன்றும் 2 படி காவலாளிகளின் பகல் மற்றும் இரவு சேவை பெறப்படுகின்றது. | |
| (ஆ) | நிலைய இடமாற்றம் காரணமாக வெற்றிடமாக இருந்த கலாச்சாரப் பிரிவில் 2018 யூலை 09 முதல் மூன்றாம் நிலை பதவியான நிர்வாக உத்தியோகத்தர் பதவிக் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் காக அவரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, இந்த ஒப்பந்த நியமனம் 4 முறை நீட்டிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் XIII ஆம் அத்தியாயத்தின் 154 ஆம் பிரிவு மற்றும் 2019 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 03/2019 ஆம் இலக்க பொதுச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையின் 05.XIV ஆம் பந்தி என்பவற்றுக்கு முரணாக அத்தகைய காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 03/2019 ஆம் இலக்க | உள்நாட்டு அலுவல்கள் மற்றும் வயம்ப அபிவிருத்தி அமைச்சு மற்றும் உயர்கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு என்பன இரண்டு புதிய அமைச்சுகளின் கீழ் வந்ததால், 2018 ஆம் ஆண்டில் இருந்த உள்நாட்டு அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அப்போதைய இலாகா மாற்றப்பட்டது. அதன் பின்னர், பதவியணியினரை ஒதுக்கீடு செய்யும் போது கலாச்சாரப் பிரிவில் உள்ள அதிகமான உத்தியோகத்தர்கள் உள்ளக அலுவல்கள் மற்றும் வயம்ப அபிவிருத்தி அமைச்சுக்கு இணைக்கப்பட்டனர்.<br><br>முன்னாள் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) காலமானதால், அந்த பதவி, நிர்வாக உத்தியோகத்தர் பதவி மற்றும் 2 உதவி செயலாளர் பதவிகள் என்பன வெற்றிடமாக உள்ளன. நிர்வாகப் பிரிவின் கடமைகள், 190 இற்கும் மேற்பட்ட கலாச்சார நிலையங்களை நிறுவும் கடமைகள், அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் உட்பட 12 நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள், சிரேஷ்ட உதவிச் செயலாளரிடம் (நிர்வாகம்) ஒப்படைக்கப்பட்டுள்ளன.<br><br>அதன் பிரகாரம் ஒரு உத்தியோகத்தரால் அத்தகைய கடமைகளைச் செய்ய | பொதுச் சேவை ஆணைக்குழுவின் நிர்வாக விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

பொதுச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையின் 05.XV ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதியம் பெறுவோர் மீண்டும் பணிக்கமர்த்தப்படுவது ஆகக்கூடியது ஒரு வருட காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2019 இற்குப் பின்னரும் இப் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படாமல் 2019 ஆகஸ்ட் 10 முதல் அவருக்கு 2 ஆண்டு சேவை நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. அவரது ஒப்பந்த சேவைக்காக 2020 திசெம்பர் 31 வரை ரூபா 1,661,578 கூட்டுமொத்தமான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன.

முடியாதிருந்ததால், அக் கடமைகளிற்காக ஆகக் குறைந்தது ஒரு உத்தியோகத்தரையாவது இணைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகையால் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். அது தொடர்பான அங்கீகாரம் கிடைத்த பின்னர் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் பொது நிர்வாக அமைச்சு உத்தியோகத்தர் ஒருவரை இணைப்பு செய்திருக்கவில்லை, ஆகையால் அக் கடமைகள் இன்றியமையாதவையாக உள்ளதுடன் இப் பதவிக்காக பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததால் அரச சேவையில் அனுபவம் வாய்ந்த இவ் உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.